வட ஆர்க்காடு மாவட்டம், ஆர்க்காடு ஒன்றியத்தில் உள்ள முள்ளுவாடி கிராமத்தில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை 1970-ம் ஆண்டில் நிலம் உள்ள ஒரு தனி நபருக்கு பட்டா செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. கே. எ. வகாப் : நிலம் இல்லாத ஏழை மக்கள் பல்லாயிரக்கணக்காக நாட்டில் இருக்கும்போது இப்படி நிலம் உள்ளவர்களுக்கு நிலத்தைக் கொடுப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? அரிசன மக்கள் நிலம் கேட்டு அவர்களுக்கெல்லாம் இன்னும் அளிக்கப்படாமல் இருக்கும் நிலையை மாற்றி உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தப் பட்டா செய்தது தவறு என்று சொல்லி அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தமிழகம் பூராவும் இருக்கின்ற மேய்ச்சல் புறம்போக்கைத் தனி நபர்கள் ஆக்கிரமித்து கொள்ளுகிறார்கள். ஆங்காங்கு மேய்ச்சல் புறம்போக்கு எந்த அளவுக்கு விடப்படவேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும், கால்நடைகளின் எண்ணிக்கை என்ன என்பதை எல்லாம் கணக்கிட்டு மேய்ச்சல் புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கி பாதுகாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேய்ச்சல் புறம்போக்கைப் பட்டா செய்வது கிடையாது. மேய்ச்சல் புறம்போக்கை சாதாரண புறம்போக்காக ரீ-க்ளாசிபிகேஷன் செய்த பிறகுதான் பட்டா செய்து கொடுக்க முடியும். ஆக்கிரமிப்புப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஆக்கிரமிப்பு இருந்தால் அகற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

New Chambers in High Court

* 231 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether new law Chambers are to be constructed inside the compound of the Madras High Court; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) ஆம்.

உயர்நீதி மன்றக்கட்டிட எல்லைக்குள் வழக்கறிஞர்களுக்கான கூடுதலான அறைகளை கட்டுவதற்கான ஒரு திட்டத்தை அரசு அங்கீகரித்துள்ளது. இத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும். இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத்தொகை ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பத்தாறாயிரம் ஆகும்.

THIRU N. DENNIS : Regarding the allotment of new chambers, may I know from the Hon. Minister whether juniors and seniors will be considered alike?

THE HON. THIRU S. MADHAVAN : That will be decided by the High Court.

THIRU M. A. LATHEEF : In view of the difficulties experienced by advocates like me, I would like to know from the Hon. Minister when the buildings would be completed? Will it be completed at least this year ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துவக்க விழா செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஹைகோர்ட்டில் மெயின் பில்டிங்கில் ஒரு லிஃப்ட் வேண்டுமென்று கடந்த பத்து வருஷ காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். லேட் ஹவுஸ் பக்கத்தில் ஒவ்வொரு சேம்பருக்கும் இரண்டு மூன்று மாடி ஏற வேண்டியிருக்கிறது. ஒரு நாளைக்குப் பத்து முறையாவது ஏறி இறங்க வேண்டியிருக்கிறது. புதிய கட்டடம் கட்டுவதோடு கூட இந்த லிஃப்ட் அமைத்துக் கொடுக்க அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்களோடு நானும் படிகளில் ஏறி இறங்கியிருக்கிறேன். அங்கத்தினர் அவர்கள் கஷ்டப் பட்டதாகக் காணவில்லை.

திருப்பூர் நீதிமன்றக் கட்டடம்

* 232 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் இடம் குறைவாக இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இட வசதி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இது உயர் நீதிமன்றத்தின் பரிசிலனையில் உள்ளது. உயர்நீதி மன்றம் கோவை (மேற்கு) மாவட்ட நீதிபதியிடம், மாவட்ட முன்சிப்கோர்ட், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், திருப்பூர் இவைகளுக்குப் போதுமான இடவசதி செய்து கொடுப்பதற்கான திட்டத்தையும் மதிப்பீட்டுச் செலவையும் கேட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் பரிசிலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்தப் பரிசிலனை எவ்வளவு காலத்தில் முடிவு பெறும்? முடிவு பெற்ற பிறகு எவ்வளவு விரைவாக திருப்பூர் நகரத்தில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

Sugar from beet-root

* 233 Q.—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start Beet Sugar Industry in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS